**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **6/2020** |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | ஜெயராமன் | CASTE | : | |
| S/O | A. போஸ் | RELIGION | : | இந்து |
| VILLAGE | சமயநல்லூர் | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | **52** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 16.09.2025**

**குறுக்கு விசாரணை**

1. நான் B.A படித்திருக்கிறேன், விவசாய தொழில் செய்து வருகிறேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான்தான் வழக்கறிஞரிடம் கூறினேன். எனது வயதை நிரூபிக்கக்கூடிய ஆவணத்தை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை நான் தாக்கல் செய்தேனா என்றால் எனது அப்பா தாக்கல் செய்தார். வழக்குரையில் உள்ள விவரங்களை யார் சொன்னது என்று எனது அப்பாவை கேட்டால்தான் தெரியும் என்றால் நானும் உடன் இருந்தேன்.

2. இந்த வழக்கில் நான் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். வெண்ணிமுத்து அய்யனார் கோவில் தலைமை நிர்வாகி சம்பந்தப்பட்ட ஆவணம் எதையும் வழக்கு தாக்கல் செய்யும்போதே தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வெண்ணிமுத்து அய்யனார் கோவில் யாருக்கு பாத்தியப்பட்டது என்பதைக்காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை எனது அப்பா தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்தாரா அல்லது சமுதாயத்திற்காக தாக்கல் செய்தாரா என்பதை அவரை விசாரித்தால்தான் தெரியும் என்றால் சமுதாயத்திற்காகத்தான் தாக்கல் செய்தார்.

3. வெண்ணிமுத்து அய்யனார் கோவில் சமுதாயத்திற்கு சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் எத்தனைபேர் என்பதைக்காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்குகோவிலின் சமுதாயத்திற்கு சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் யாரையும் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அழகர் என்பவர் 2ம் நிலை பூசாரி என்பதால்தான் அவரை வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார் என்றாலும், சமுதாயத்திற்கு சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள்

யாரையும் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அழகர் சமுதாயத்தில் உறுப்பினராக உள்ளதால்தான் பூசாரியாக உள்ளார்.

4. வழக்கில் வாதியான எனது அப்பாவைத்தவிர சமுதாய உறுப்பினர்கள் யாரும் வழக்கில் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். வழக்கை எனது அப்பா சமுதாயத்திற்காக தாக்கல் செய்த நிலையில் சமுதாயத்திற்காக வழக்கை தாக்கல் செய்து நடத்த அனுமதி கோரி மனுதாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அனுமதி மனு தாக்கல் செய்யாத காரணத்தால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

5. எனது பிறந்த தேதி 28.04.1973. எனது பிறந்த தேதியை நிரூபணம் செய்ய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆதார் கார்டை தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லுவதுபோல் எனது ஆதார் கார்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது அப்பாவின் அதிகாரம் பெற்ற முகவர் என்பதைக்காட்ட முதல் விசாரணை வாக்குமூலத்துடன் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பா வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளைத்தான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

6. வழக்குரையில் உள்ள விவரங்களை எனது அப்பாவை விசாரித்தால்தான் தெரியவரும் என்றால் சரிதான், எனது அப்பா வயதாகி விட்டதன் காரணமாக என்னை சாட்சி சொல்ல அனுப்பினார். எனது அப்பா நல்ல உடல்நிலையில்தான் உள்ளார் என்றாலும் அவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தால் உண்மை தெரியவரும் என்பதற்காக சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா சாட்சியம் அளிக்கமுடியாத உடல்நிலையில் உள்ளார் என்பதைக்காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. பொதுவாக சமுதாயத்திற்கு கோவில் பாத்தியப்பட்டது என்றால் அதன் உறுப்பினர்கள் கூட்டம்போட்டு சமுதாய நிர்வாகியை தேர்ந்தெடுத்த தீர்மான நோட்டு, உறுப்பினர்கள் விவரம் இருக்கும் என்றால் சரிதான். வழக்குக்கோவில் சம்பந்தமான நிர்வாகியை தேர்ந்தெடுத்த தீர்மான நோட்டு, உறுப்பினர்கள் விவரம் ஆகியவற்றை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அப்பாதான் வழக்குகோவிலின் நிர்வாகி என்பதைக்காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டா எனது அப்பா பெயரில் உள்ளது.

8. வா.சா.ஆ.1, 2 தேதிக்கு முன் எனது அப்பாதான் கோவில் நிர்வாகிதான் என்பதைக்காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை கருப்புசேர்வை என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார்கள். கருப்புசேர்வை பெயரில் எப்போது பட்டா தரப்பட்டது என்ற விவரம் தெரிந்துதான் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். கருப்புசேர்வைக்கு எப்போது பட்டா தரப்பட்டது என்று எனக்குத்தெரியாது. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தின்படி 01.04.2015 ந் தேதிதான் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் இணைக்கப்பட்டுள்ள பட்டாவில் சொத்தின் நான்குமாலை குறிக்கும் வகையில் வரைபடம் இல்லை என்றால் சரிதான். பட்டாவில் நான்குமால் குறிப்பிடாத நிலையில் கிரையப்பத்திரத்தில் நான்குமால் குறிப்பிட்டு எனது அப்பா கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். கருப்புச்சேர்வை 2000ம் வருடம் இறந்தார். தேதி, மாதம் ஞாபகமில்லை. வெண்ணிமுத்து அய்யனார் கோவிலுக்கு வடபுரம் 1ம் பிரதிவாதி வேலி அமைத்துள்ளார் என்றால் சரிதான். வழக்குக்கோவிலின் தென்புரம் பொதுப்பாதை உள்ளது என்றாலும், அதைஒட்டி மேற்குபுரம் 1ம்பிரதிவாதி இடத்தில் வேலி அமைத்து வீடு கட்டி குடியிருக்கிறார் என்றால் சரியல்ல, வேலி போட்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளார்.

10. வழக்குக்கோவிலின் வடபுரம் காலியிடத்திற்கு அடுத்து 1ம் பிரதிவாதி வீடு கட்டி, அவரது வீட்டிற்கு வடக்கு, வடகிழக்கு, வடமேற்கு பகுதியான 3540 சதுரடியை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்குக்கோவிலின் வடபுரம் 1ம் பிரதிவாதி 2 வீடுகள் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல, 1 வீடுதான் கட்டியுள்ளார். மேற்படி இடத்திற்கு 1ம் பிரதிவாதி வீடுகட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் வழக்கிற்காக மறுத்துச்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 பத்திரத்தில் இணைக்கப்பட்டுள்ள பட்டாவின் புதிய சர்வே எண் 1754/4ல் உட்பிரிவு செய்யப்படுவதற்குமுன் மொத்தம் எவ்வளவு நிலம் இருந்தது என்று வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

11. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் உள்ள பட்டாவிற்கு முன் கருப்புச்சேர்வையின் அனுபவம் மற்றும் உரிமையைக்காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கருப்புச்சேர்வை 11.01.2000ம் அன்று இறந்தார் என்றாலும் அவருக்கு கொடுக்கப்பட்டதாக இருக்கும் பட்டாவை வைத்து போலியாக

கிரையப்பத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் கருப்பச்சேர்வையின் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். மேற்படி **இறப்புச்சான்றிதழ் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

12. சொத்திற்கான பத்திரம் பதிவு செய்யப்பட்டால்தான் அது செல்லும் என்பது எனக்கும் எனது அப்பாவிற்கும் தெரியும். 1993 ல் வாய்க்கரலாக எனது அப்பா கிரையம் பெற்றுள்ளது செல்லாது என்றால் எப்போது பதியக்கேட்டாலும் பதிவு செய்துதருவதாக பிரதிவாதி ஒப்புக்கொண்டார். 1993 ல் வாய்க்கரால் கிரையம் பற்றி எனது அப்பாவிற்குதான் தெரியும் என்றால் எனக்கும் தெரியும். மேற்படி வாய்க்கரலால் கிரையம் பற்றி எனக்கு தெரியாது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

13. 1993 வாய்க்கரால் கிரையத்திற்கு பின் வழக்குச்சொத்து எங்கள் அனுபவத்தில் இருந்தது என்பதைக்காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்குச்சொத்து ஆதியில் கருப்பச்சேர்வையின் அனுபவத்திலிருந்து அவரது இறப்பிற்குபின் அவரது வாரிசுகள் அனுபவத்தில் இருந்ததாக வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பத்திரம் எழுதிய தேதியில்தான் அனுபவத்தை ஒப்படைத்ததாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

14. வா.சா.ஆ.3, 5 புகார் மனுக்களில் பிரதிவாதிகள் வழக்குச்சொத்தை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புகாரில் சொல்லியுள்ள போலி ஆவணங்களை செல்லாது என்பதை அறிவிக்க இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் புகாரின்படி அந்த ஆவணங்களை நிறுத்தி வைத்துள்ளார்கள், வீடு கட்டுவதற்கான ஆணையை ரத்து செய்துவிட்டார்கள். நான் வீடு கட்டுவதற்கான ஆணையை ரத்து செய்ததாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

15. 1ம் பிரதிவாதி பசுமைத்திட்டத்தின்படி வீடு கட்டி வரி செலுத்தி அனுபவம் செய்கிறார் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக மறுத்து சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் வாய்க்கரால் கிரையம் பெற்றிருந்தால் அது வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றாலும் நான் சொல்வதுபோல் கிரையம் பெறவில்லை என்றாலும் வழக்குச்சொத்தின் அனுபவத்தில் எப்போதும் இருந்ததில்லை என்றாலும்

சரியல்ல. 2019 ம் ஆண்டிலிருந்து 1ம் பிரதிவாதி வீடு கட்டி வருவதாக வட்டாட்சியரிடம் மனு கொடுத்து அதன்பேரில் சொத்தை அளந்து ஒப்படைப்பு செய்ய உத்தரவு பிறப்பித்ததாக வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதை நிரூபணம் செய்ய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

16. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்திலுள்ள பட்டா கொடுப்பதற்கு முன்பே, சர்வே எண் 1754/4 ஆக உட்பிரிவு செய்வதற்கு முன்பிருந்தே, சர்வே எண் 1754 ல் கட்டுப்பட்ட சொத்தில் 1ம் பிரதிவாதி 3540 சதுரடியை உரிமையாளர் என்ற நிலையில் அனுபவம் செய்துவந்த நிலையில் அவருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

17. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பிருந்தே 1ம் பிரதிவாதி வழக்குச்சொத்தின் அனுபவத்தில் இருந்தார் என்பதை வழக்கில் ஒப்புக்கொண்டுள்ளதால் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கருப்பச்சேர்வை பெயரில் மோசடியாக பட்டா பெற்று அதனடிப்படையில் பதியப்பட்ட வா.சா.ஆ.1 கிரையப்பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. வெண்ணிமுத்து அய்யனார் கோவில் கிராம மக்களுக்கு பொதுவாக பாத்தியப்பட்டது என்றாலும் அதை எனது அப்பாவின் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

18. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் கேள்விபட்டவை என்றாலும் நேரடியாக எனக்குத்தெரியாது என்றாலும், நான் சாட்சியம் அளிக்க எந்த அதிகாரமும் அளிக்கப்படாததால் எனது வாக்குமூலம் செல்லாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி